# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10.* Ph. 0452 – 4354302


## பரிசுத்த ஆவியானவர் (பகுதி – 1)

*(பரிசுத்த ஆவியானவரின் ஆள்தன்மையும், தெய்வீகமும், பெயர்களும், அடையாளங்களும்)*

**முன்னுரை :**

பரிசுத்த ஆவியானவரின் காலத்தில் நாம் ஜீவிக்கின்றோம். அவருடைய ஊழியத்தைக்குறித்த ஆர்வம் உலக முழுவதிலும் அதிகமாக உள்ளது. ஆனபோதிலும், தவறான போதனையின் காரணமாக அதிகமான குழப்பங்கள் உள்ளன. இந்தவிதமான காரியங்களைக் கேட்பதாலும், பார்ப்பதாலும் ஆயிரக்கணக்கான மக்கள் மனம்குழம்பி, வழிதவறிப் போய் விடுகிறார்கள். எனவே இந்தப் பாடத்திலும், வருகிற மற்ற இரண்டு பாடங்களிலும் பரிசுத்த ஆவியானவரின் ஆள்தன்மையையும், அவருடைய வேலையையும் குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதைத் தெளிவாகவும், விவரமாகவும் உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறோம். இதுவே எங்களது முக்கிய நோக்கமாகும்.

### இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

பரிசுத்த ஆவியானவரே ஜீவாதிபதி (யோவான் 3:5). வல்லமையைக் கொடுப்பவர் இவரே (அப்போஸ்தலர் 1:8). இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்துகிறவரும் இவரே (யோவான் 16:14). பரிசுத்த ஆவியானவரை அறிந்துகொள்வதும், அவர் என்ன செய்கிறார், யாருக்குச் செய்கிறார், எப்படிச் செய்கிறார், ஏன் செய்கிறார் என்பதைப் புரிந்துகொள்வதும் மிகவும் முக்கியமான காரியமாகும். பரிசுத்த ஆவியானவர் தேவனும், திரித்துவத்தில் மூன்றாவது நபருமாக இருப்பதால் அவரையும், அவருடைய வேலையையும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. அப்பொழுதுதான் தேவனை முழுவதுமாய் அறிய முடியும். அதுமட்டுமல்லாமல் சகலத்துக்கும் பாத்திரராய் இருக்கிற தேவனுக்கே நம்முடைய தொழுகையையும், அன்பையும், நமது ஊழியத்தையும் சமர்ப்பிக்க முடியும். பரிசுத்த ஆவியானவர்தாமே உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவாராக.

**பாடம்**

### I. பரிசுத்த ஆவியானவரின் ஆள்தன்மை :

<u>**குறிப்பு :**</u> இரண்டுவிதமான கருத்துக்கள் :

**முதலாவது கருத்து :** பரிசுத்த ஆவியானவர் பலவீனமுள்ள நபர்கள் பெற்று பயன்படுத்தக்கூடிய சாதாரண வல்லமையே.

**இரண்டாவது கருத்து :** பரிசுத்த ஆவியானவர் வரையரையில்லாத ஞானமும், பரிசுத்தமும், அன்பும், வல்லமையும் கொண்ட ஓர் ஆள். இவர் நம்மை ஆட்கொண்டு பயன்படுத்த விரும்புகிறார். இக்கருத்தையே நாம் இறுகப்பிடித்துக்கொள்ள வேண்டும்.

<u>*குறிப்பு :*</u>

பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய காரியங்களிலும், நடைமுறைக் காரியங்களிலும் ஒரு ஆள்தன்மையில் செயல்படுகிறார் என்பதை அங்கீகரிப்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

**முதலாவது,** பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தேவனாக இல்லாமல் தேவனிடத்திலிருந்து புறப்படுகிற சக்தியாக மட்டுமே காணப்படுவார் என்றால் தொழுகைக்கும், அன்பிற்கும் சகலத்திற்கும் பாத்திரராகிய அவருக்குத் தொழுகையையும், விசுவாசத்தையும், அன்பையும் செலுத்த நாம் தவறிவிடுவோம்.

**இரண்டாவது,** பரிசுத்த ஆவியானவர் கிருபையுள்ள பரிசுத்த சக்தி என்று கருதினால் நம்மில் வந்து வாசமாயிருக்கிற தேற்றரவாளரின் வல்லமையையும், பிரசன்னத்தையும் கட்டுப்படுத்துவதாக இருக்கும் (யோவான் 14:16,17).

**அ. பரிசுத்த ஆவியானவர் தேவனிடத்திலிருந்து வந்த வெறும் சக்தியே என்று சிலர் ஏன் நம்புகிறார்கள் :**

1. கிரேக்கு மொழியில் ‘‘ஆவி’’ என்ற வார்த்தையானது அஃறிணையைக் குறிக்கிறது. அதாவது இருபாலையும் சேராத ஒரு வார்த்தை ஆகும். ஆகவே சொற்களின்படி ‘‘ஆவி’’ என்பதற்கு ‘‘காற்று’’ என மொழிபெயர்க்கலாம். ஏனென்றால் ரோமர் 8;14,15,23–வது வசனங்களில் உள்ள ஒரு அங்கீகாரம் பெற்ற ஆங்கில மொழிபெயர்ப்பு ‘‘அதுவே’’ என்று மொழிபெயர்த்துள்ளது. ஆங்கில திருத்திய மொழிபெயர்ப்பு இதை ‘‘அவர்தாமே’’ என்று மொழிபெயர்த்துள்ளது.

2. மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் சபைகளுக்கு வாழ்த்துக்கள் கூறி எழுதும்பொழுது வழக்கமாக பரிசுத்த ஆவியானவரை சேர்க்கவில்லை.

(உதாரணம் : கலாத்தியர் 1:1–3; எபேசியர் 1:1,2; பிலிப்பியர் 1:1,2).

ஆயினும் அப்போஸ்தலனாகிய பவுல் கடைசியாக கொரிந்தியரை வாழ்த்தும்பொழுது பரிசுத்த ஆவியானவரையும் சேர்த்துக் கூறுவதை நாம் 2 கொரிந்தியர் 13:14–ஆம் வசனத்தில் வாசிக்கலாம்.

3. பரிசுத்த ஆவியானவர் அடிக்கடி காற்று, சுவாசம், நெருப்பு, தண்ணீர் இவைகளுக்கு ஒப்பிடப்பட்டு எழுதப்பட்டிருப்பதால் சில ஆசிரியர்கள் இவரை தேவனிடத்திலிருந்து வந்த ஆசீர்வதிக்கப்பட்ட சக்தியே என்றும், ஆள்தன்மை கொண்டவரல்ல என்றும் தவறாக நம்பினது மட்டுமல்லாமல் போதித்தும் இருக்கிறார்கள்!

**ஆ. பரிசுத்த ஆவியானவரின் ஆள்தன்மை நிரூபிக்கப்பட்டுள்ளது :**

1. யோவான் 14:16,17,26 , யோவான் 16:7,8, 13–15, யோவான் 15:26

குறிப்பாக இந்தப் பாகங்களில் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும்பொழுது "அவர்" "அவருடைய" என்ற ஆண்பால் பிரதிப்பெயர்கள் தொடர்ந்து பயன் படுத்தப்பட்டுள்ளதை நாம் பார்க்கலாம். "ஆவி" என்ற வார்த்தையானது அஃறிணையாக இருந்தாலும் (அதாவது இருபாலையும் சேராத) ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவரைக்குறித்துப் பேசும்பொழுது "அவர்" "அவருடைய" என்ற ஆண்பாலைக் குறிக்கும் பதங்களை இந்தப் பாகத்தில் ஏறக்குறைய 12 தடவைகள் உபயோகித்துள்ளதை நாம் கவனிக்கலாம். இவைகள் பரிசுத்த ஆவியானவரின் ஆள்தன்மையை உறுதிப்படுத்துகிறது.

2. பரிசுத்த ஆவியானவரின் குணாதிசயங்கள் அவரின் ஆள்தன்மையை வெளிப்படுத்துகின்றன :
   1. பரிசுத்த ஆவியானவர் திட்டமான சித்தமும், நோக்கமும் உடையவராக இருக்கிறார் (1 கொரிந்தியர் 12:11).
   2. பரிசுத்த ஆவியானவருக்கு புத்தி நுட்பமும், அறிவும் இருக்கிறது (ரோமர் 8:27; 1 கொரிந்தியர் 2:9–11).
   3. அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபம் 5:22,23–ஆம் வசனங்களில் வரிசைப்படுத்தி எழுதியிருக்கிற ஆவிக்குரிய குணங்களைச் சிந்தித்துப்பாருங்கள். இவைகளனைத்தும் பரிசுத்த ஆவியானவரின் ஆள்தன்மையைக் குறிக்கிறது.

3. பரிசுத்த ஆவியானவரின் வெவ்வேறு செயல்கள் அவரின் ஆள்தன்மையை வற்புறுத்துகிறது :
   1. பரிசுத்த ஆவியானவர் நமக்கு வல்லமையைக் கொடுக்கிறார் (அப்போஸ்தலர் 1:8).
   2. பரிசுத்த ஆவியானவர் நம்மை நடத்துகிறார் (ரோமர் 8:14; அப்போஸ்தலர் 16:6,7).
   3. பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஆறுதல் அளிக்கிறார் (அப்போஸ்தலர் 9:31; யோவான் 14:16).
   4. பரிசுத்த ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:26).
   5. பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவைக்குறித்து சாட்சிகொடுக்கிறார் (யோவான் 15:26).
   6. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார் (ரோமர் 8:16; கலாத்தியர் 4:6).
   7. பரிசுத்த ஆவியானவர் பேசுகிறார் (வெளி. 2:7).
   8. பரிசுத்த ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் போதித்து வழிநடத்துகிறார் (யோவான் 14:26, 16:13,14).
   9. பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் காரியத்தையும், சபையின் காரியத்தையும் நிர்வாகம் செய்கிறார் (அப்போஸ்தலர் 16:6,7, 13:2, 20:28).

4. சில பாவங்களை நாம் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகச் செய்கிறோம் என்று வேதவசனம் குறிப்பிடுகின்றது. பரிசுத்த ஆவியானவர் ஒரு சக்தியாக அல்லது தெய்வீக ஆற்றலாக மட்டுமே இருக்கக்கூடுமானால் அதற்கு விரோதமாக இப்படிப்பட்ட பாவங்களை ஒருவன் செய்யமுடியாது.
   1. பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள் (எபேசியர் 4:30).
   2. ஆவியை அவித்துப் போடாதிருங்கள் (1 தெசலோனிக்கேயர் 5:19).
   3. பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பொய் சொல்லுதல் (அப்போஸ்தலர் 5:3).
   4. பரிசுத்த ஆவியை நிந்தித்தல் (எபிரெயர் 10:29).
   5. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணம் (மத்தேயு 12:31,32).
   6. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக எதிர்த்து நிற்குதல் (அப்போஸ்தலர் 7:51).

இ. 1. பரிசுத்த ஆவியானவர் ஆள்தன்மை கொண்டவர் ஆனதால் அவருக்கும், உங்களுக்கும் உள்ள உறவு என்ன?

2. பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை உங்களுடைய வாழ்க்கையில் உணர முடிகிறதா?

3. பரிசுத்த ஆவியானவர் காட்டுகிற வழியிலும், வல்லமையிலும் நீங்கள் முழுவதுமாக சார்ந்திருக்கிறீர்களா?

4. பரிசுத்த ஆவியானவருடன் நீங்கள் வேலை செய்கிறீர்களா? வாழ்கிறீர்களா? அவருடன் உங்களுக்கு ஐக்கியம் இருக்கிறதா?

5. பரிசுத்த ஆவியானவருக்கு உரிய தொழுகையையும், அன்பையும் கொடுத்திருக்கிறீர்களா?

## II. பரிசுத்த ஆவியானவரின் பரிபூரண தெய்வத்துவம் :

<u>குறிப்பு :</u>

பரிசுத்த ஆவியானவர் தனித்திராமல் நமது திரியேக தெய்வத்தின் ஒரு பகுதியாய் மட்டும் இருப்பாரென்றால், அவர் ஒரு ஆள்தத்துவம் உடையவராய் இருக்க இயலாது. பரிசுத்த ஆவியானவர் தெய்வமாய் இல்லையென்றால் அவரை நேசிப்பதும், வணங்குவதும், அவருக்கு ஊழியம் செய்வதும், கீழ்ப்படிவதும் தவறான செயலாகும்.

**அ. பரிசுத்த ஆவியானவரின் தெய்வத்துவத்தை நிரூபித்தல் :**

அவர் பிதாவாகிய தேவனோடும், குமாரனாகிய தேவனோடும் சமமாக சகவாசம் உடையவராய் இருக்கிறார் :

1. அப்போஸ்தல ஆசீர்வாதத்தில் (2 கொரிந்தியர் 13:14)
2. ஞானஸ்நான கட்டளையில் (மத்தேயு 28:19) (''நாமத்தில்'' என்ற வார்த்தையை கவனிக்கவும். ''நாமங்களில்'' என்று சொல்லப்படவில்லை).
3. ஆவியின் வரங்களை பகிர்ந்துகொடுப்பதில் (1 கொரிந்தியர் 12:4–6).

**ஆ. பரிசுத்த ஆவியானவரே தேவன் என்று அழைக்கப்படுகிறார் (அப்போஸ்தலர் 5:3,4).**

**இ. தேவன் செய்யக்கூடிய காரியங்களை அவர் செய்கிறதாக சொல்லப்பட்டிருக்கிறது :**

1. அவர் சிருஷ்டிக்கிறார் (சங்கீதம் 104:30; ஆதியாகமம் 1:2).
2. அவர் மறுபிறப்படையச் செய்கிறார் (யோவான் 3:5).
3. அவர் ஜீவன் கொடுக்கிறார் (யோவான் 6:63).
4. அவர் உயிர்ப்பிக்கிறார் (ரோமர் 1:5, 8:11).
5. வரும் காரியங்களைக்குறித்து தீர்க்கதரிசனமாக உரைக்கிறார் (2 பேதுரு 1:21).
6. தமது மகத்துவத்தின்படி மனிதர்களுக்கு வரங்களை அளிக்கிறார் (1 கொரிந்தியர் 12:8–11).

**ஈ. அவர் தெய்வத்தின் குணாதிசயங்கள் அனைத்தையும் உடையவராய் இருக்கிறார் :**

**குணாதிசயம் என்பது என்ன?**

தேவனுடைய குணாதிசயம் என்பது திரியேக தேவனின் மாறாத தன்மைகளையும், வல்லமையையும் தனித்தனியே வேறுபடுத்தி அறிந்துகொள்வது.

இந்த குணாதிசயங்களை இரு பிரிவாகப் பிரிக்கலாம் :

1. இயற்கையானது 2. நல்லொழுக்கமுடையது

இயற்கையான குணாதிசயங்கள் என்பது, இயற்கையாகவே தேவனிடத்திலிருந்து வேறுபடுத்தப்பட முடியாத தெய்வத்தன்மை. இவைகள் தேவனை தேவனாக வெளிப்படுத்துபவை.

நல்லொழுக்கமுடைய குணாதிசயங்கள் என்பது, அவரது சிருஷ்டிகளுக்கு அவரை வெளிப்படுத்தக்கூடிய அவருடைய குணாதிசயங்கள்.

**1. பரிசுத்த ஆவியானவரின் இயற்கையான குணாதிசயங்கள் :**

**1. தேவனுடைய ஜீவனை வெளிப்படுத்துபவை :**

| | |
|---|---|
| ஜீவன் | .. ரோமர் 8:2 |
| ஆவியின் தன்மை (காணப்படாதவர்) | .. யோவான் 3:8 |
| ஆள்தத்துவம் (ஞானமும், சுயசித்தமும் உடையவர்) | .. யோவான் 14:26 |

**2. தேவனின் ஆள்தத்துவத்தை வெளிப்படுத்துபவை :**

| | |
|---|---|
| தனி முழுமை | .. யோவான் 17:22; மத்தேயு 28:19,20 |

(பிரிக்கப்படாதவர், பூரணர், ஒரே மெய்யான தேவன், மூவராக வெளிப்படுத்தப்பட்டவர்)

| | |
|---|---|
| நித்தியமானவர் | .. எபிரெயர் 9:14 |
| நிலையானவர் (நிலைகொண்டவர்) | .. ஆகாய் 2:5 |

**3. தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்துபவை :**

| | |
|---|---|
| சர்வ ஞானமுள்ளவர் | .. 1 கொரிந்தியர் 2:9–14 |
| சர்வ வியாபகர் | .. சங்கீதம் 139:7–10 |
| சர்வவல்லமை உடையவர் | .. ஆதியாகமம் 1:2; ரோமர் 15:18 |

**2.பரிசுத்த ஆவியானவரின் நீதியுள்ள குணாதிசயங்களுக்கு எடுத்துக்காட்டுகள் :**

**1. தேவனுடைய சுபாவத்தை வெளிப்படுத்தக்கூடியவைகள் :**

| | |
|---|---|
| அன்பு | .. கலாத்தியர் 5:22; ரோமர் 5:5 |
| கிருபை | .. எபிரெயர் 10:29 |
| இரக்கம்(தயவு, மன உருக்கம்) | .. கலாத்தியர் 5:22 |

**2. தேவனுடைய குணத்தை வெளிப்படுத்துபவை :**

| | |
|---|---|
| பரிசுத்தம் | .. ரோமர் 1:5 |
| நீதி | .. யோவான் 16:7–10 |
| உண்மை (வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுபவர்) | .. எபேசியர் 1:13,14; 2 கொரிந்தியர் 2:9–11 |

**3. தேவனுடைய இராஜரீகத்தை வெளிப்படுத்துபவை :**

| | |
|---|---|
| ஞானம் | .. 1 கொரிந்தியர் 12:8; 2:9–11 |
| சத்தியம் | .. யோவான் 14:17 |
| மகத்துவம் (சர்வ அதிகாரம் உள்ளவர்) | .. 2 பேதுரு 1:21 |

**குறிப்பு :**

பரிசுத்த ஆவியானவரின் தெய்வத்துவத்தையும் திரியேக தேவனில் அவர் ஒரு தனிப்பட்ட ஆள்தத்துவம் உள்ளவர் என்பதையும் அறிந்து உணர்ந்து அவரை அவ்விதமாகவே கனப்படுத்தி தொழுகை செய்வோம். பரிசுத்த ஆவியானவரை ஒரு வல்லமையாகவோ, அனுபவிக்கக்கூடிய ஒரு உணர்ச்சியாகவோ கண்ணோக்காமல் அவருடைய தெய்வீக ஆள்தத்துவத்தை அறிந்து நடக்கும்போது நம்முடைய வாழ்க்கையானது உறுதிப்பட்டதாயும், ஆசீர்வதிக்கப்பட்ட நிறைவான வாழ்க்கையாகவும் காணப்படும். அவர், நாம் நேசிக்கக்கூடியவராகவும், நாம் சார்ந்திருக்கக்கூடியவராகவும், நம்மை அவரிடத்தில் அர்ப்பணிக்கக் கூடியவராகவும் இருக்கிறார். அவருடைய ஐக்கியத்தைத் தொடர்ந்து அனுபவிக்கலாம்.

## III. பரிசுத்த ஆவியானவரின் பெயர்கள் :

பரிசுத்த ஆவியானவருக்கென்று கொடுக்கப்பட்டுள்ள தனிப்பட்ட பெயர்களைப் பார்க்கும்போது, தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட அவருடைய கிரியைகளின் தன்மையை உணரமுடியும்.

**அ. தேவனுடைய ஆவியானவர் : (1 கொரிந்தியர் 3:16)**

கிறிஸ்துவின் ஆவியானவர் (ரோமர் 8:9). ஆவியானவர் பிதாவினாலும், குமாரனாலும் தேவனின் செயலாற்றும் தெய்வீகப் பிரதிநிதியாய் அனுப்பப்பட்டுள்ளார்.

**ஆ. பரிசுத்த ஆவியானவர் : (லூக்கா 11:13; ரோமர் 1:5)**

(பரிசுத்தத்தின் ஆவி) இந்த நாமம் பரிசுத்த ஆவியானவரின் பரிசுத்தத் தன்மையை வெளிப்படுத்துகிறது. பரிசுத்தமுள்ள இவர் நம்மைப் பரிசுத்தப்படுத்தி நமக்குள்ளே பரிசுத்தத்தை உருவாக்குகிறார்.

**இ. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவர் : (எபேசியர் 1:13)**

பரிசுத்த ஆவியானவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவராக வந்தார் என்பதை நாம் பார்க்கலாம் (யோவான் 14:16–18). நமக்குள் அவர் ‘‘முத்திரையாக’’ இருக்கிறார் (எபேசியர் 1:13). அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் ‘‘அச்சாரமாயிருக்கிறார்’’ (எபேசியர் 1:14).

**ஈ. கிருபையின் ஆவியானவர் : (எபிரெயர் 10:29)**

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய கிருபையை நிர்வகிக்கிரவராகவும், பகிர்ந்து கொடுக்கிறவராகவும் இருக்கிறார் என்பதைக் காண்கிறோம்.

**உ. ஜீவ ஆவியானவர் : (ரோமர் 8:2)**

பரிசுத்த ஆவியானவரே ஜீவன் கொடுப்பவர். நம்மில் கிறிஸ்து வாழுகிறார் என்ற உண்மையை உருவாக்குகிறார்.

**ஊ. சத்திய ஆவியானவர் : (யோவான் 14:17; 15:26; 16:13)**

பரிசுத்த ஆவியானவர் நாம் சத்தியத்தை அறிந்துகொள்ளவும், அவரில் உறுதிப்படவும் செய்கிறார். இயேசுகிறிஸ்துவைக்குறித்து சாட்சிகொடுக்கிறார். நமக்குச் சகல சத்தியத்தையும் போதித்து சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்துகொள்ளச் செய்கிறார்.

**எ. மகிமையுள்ள ஆவியானவர் : (1 பேதுரு 4:14)**

தாம் மகிமை நிறைந்தவராக மட்டுமல்ல, நமக்கு மகிமையை (அதாவது தேவனுடைய தன்மையைக்) கொடுப்பவராகவும் இருக்கிறார். தேவனுடைய கிருபையை நிர்வகித்து, நமக்குப் பகிர்ந்து கொடுத்து நம்மை மகிமையடையவும் செய்கிறார் (ரோமர் 8:16,17).

**ஏ. நித்திய ஆவியானவர் : (எபிரெயர் 9:14)**

பரிசுத்த ஆவியானவரின் முடிவில்லாத பணியையும், நித்திய தெய்வீக குணாதிசயத்தையும், அவரின் பரிபூரண தெய்வீகத்தையும் நிரூபிக்கிறது.

<u>**குறிப்பு :**</u>

நீங்கள் வேதத்தைப் படிக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவரின் மற்ற பெயர்களைக் கண்டுபிடிக்கக்கூடும். ஆனால் நம் நோக்கத்திற்கு இப்பொழுது கொடுக்கப்பட்டுள்ள பெயர்கள் போதுமானவை ஆகும்.

## IV. பரிசுத்த ஆவியானவரை குறிக்கும் அடையாளங்கள் :

பரிசுத்த ஆவியானவருக்கு வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள அடையாளங்கள் அவரின் குணத்தையும், குறிப்பிட்ட பணியையும் வெளிப்படுத்துகிறது.

**1. புறா : (மத்தேயு 3:16; மாற்கு 1:10; லூக்கா 3:22; யோவான் 1:32)**

வெள்ளைப்புறா தூய்மையை வெளிப்படுத்துகிறது. புறாக்கள் செய்தியாளர்களாகவும் பயன்படுத்தப்பட்டன. பரிசுத்த ஆவியானவரும் இவ்விதமே இருக்கிறார்.

**2. காற்று : (யோவான் 3:8; அப்போஸ்தலர் 2:1–4)**

காற்றைப் பார்க்கமுடியாது. ஆனால் அது வல்லமையுள்ளது, ஊடுருவிச் செல்லக்கூடியது. மேலும் காற்று புத்துணர்ச்சி ஊட்டக்கூடியது. பரிசுத்த ஆவியானவரும் இப்படியே இருக்கிறார்.

**3. அக்கினி : (அப்போஸ்தலர் 2:3; எரேமியா 20:9)**

(அவர் தேவனுடைய வார்த்தையை அக்கினியைப்போல் மாற்றுகிறார் – மல்கியா 3:2). (அவருடைய வார்த்தை புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போல் இருக்கும்). நெருப்பு எரிக்கும், தூய்மைப்படுத்தும். அதேவிதமாகப் பரிசுத்த ஆவியானவரும் கிரியை செய்கிறார்.

**4. எண்ணெய் : (யாத்திராகமம் 27:20, 30:31; அப்போஸ்தலர் 1:8; 2:4; எபிரெயர் 1:9)**

எண்ணெய் வழுவழுப்பாக்கி சுமூகமாகச் செயல்படப் பயன்படுகிறது. (ஒலிவ எண்ணெய்) உணவிற்கும், விளக்கு எரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. தேவனுடைய வல்லமை ஊற்றப்படுவதற்கு அடையாளமாக, அபிஷேகம் செய்வதற்கும் எண்ணெய் பயன்படுத்தப்பட்டது.

**5. தண்ணீர் : (யோவான் 7:37–39)**

தண்ணீர் நமக்குப் புத்துயிரளிக்கிறது, களைப்பிலிருந்து பழையநிலைக்குக் கொண்டுவருகிறது. நம்மைத் திருப்தியாக்குகிறது, நம்முடைய ஜீவனைக் காப்பாற்றுகிறது. பரிசுத்த ஆவியானவரும் இவ்வாறே கிரியை செய்கிறார்.

**6. முத்திரை : (எபேசியர் 1:3, 4:30)**

நாம் தேவனுக்கு சொந்தம் என்பதற்கு அவரால் கொடுக்கப்பட்ட முத்திரையே பரிசுத்த ஆவியானவர். பரிசுத்த ஆவியானவரால் நாம் முத்திரை போடப்பட்டபடியினால் நாம் தேவனுடையப் பிள்ளைகள் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது.

**7. அச்சாரம் : (2 கொரிந்தியர் 5:5, 1:22; எபேசியர் 1:14)**

ஒரு பொருளை வாங்கும்பொழுது முன்பணம் கொடுக்கப்படும். இதற்கு அச்சாரம் எனப்படும். இவை வாக்குறுதியாகவும், உத்திரவாதமாகவும் இருக்கிறது. நாம் மகிமையை சுதந்தரிப்போம் என்பதற்கு பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய உத்திரவாதமாக இருக்கிறார்.

**முடிவுரை :**

"பரிசுத்த ஆவியானவர்" என்ற பாடமானது மிகவும் விசாலமான, முக்கியமான ஒன்றாகும். எனவே 7,8–ஆம் பாடங்களில் இவரைக்குறித்து தெளிவாகப் படிப்போம். பழைய ஏற்பாட்டிலும், இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையிலும் பரிசுத்த ஆவியானவரின் பணியைக்குறித்துப் படிப்போம். சிருஷ்டிப்பில், வேதத்தில், அவிசுவாசிகளின் மத்தியில், விசுவாசிகளின் மத்தியில் பரிசுத்த ஆவியானவரின் பணி என்ன என்பதைக் குறித்துப் படிப்போம். ஆவியானவரின் ஞானஸ்நானம், ஆவியானவரின் வரங்கள், ஆவியானவரால் நிரப்பப்படுதல், ஆவியானவரின் வல்லமை என்பதைக்குறித்து தெளிவாகப் பார்ப்போம். இப்பாடத்தை படிக்கக்கூடிய அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் சுபாவத்தையும், ஊழியத்தையும் குறித்து தெளிவான அறிவை அறிந்துகொள்ள முடியும்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# பரிசுத்த ஆவியானவர் (பகுதி – 1)

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

**சரியான விடையை வட்டமிட்டு ◯ காட்டவும்**

1. பரிசுத்த ஆவியானவர் வெறும் வல்லமை என்று நம்புவதால், ஒரு மனிதனுக்கு ஏற்படுவது என்ன ?
   a. அவரை தெய்வமாக தொழுதுகொள்வதையும், அன்புகூருவதையும் தடை செய்கிறது
   b. அவருடைய பிரசன்னத்தை கட்டுப்படுத்துவதாக உள்ளது
   c. தேவனுக்கு நன்றி சொல்ல ஏதுவாகிறது
2. நமது கிறிஸ்தவ வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்று அறிந்துகொள்வதால் ஏற்படும் பயன் என்ன ?
   a. சந்தோஷமடையச் செய்கிறது
   b. ஒரு விசுவாசி ஆவியானவர் தன்னை ஆளுகை செய்யும்படி ஒப்புக்கொடுக்க ஏவுகிறது
   c. ஒரு விசுவாசி கிறிஸ்துவுக்காக சாட்சி பகர உதவுகிறது
3. தேவனுடைய குணாதிசயத்தின் இரண்டு வகைகள் என்ன ?
   1. ---------------------------
   2. ---------------------------
4. பரிசுத்த ஆவியானவர் தேவன் என்று போதிக்கும் வசனத்தை குறிப்பிடவும்.
   a. 2 கொரிந்தியர் 13:14
   b. அப்போஸ்தலர் 5:3,4
   c. யோவான் 6:63
5. தேவனுடைய குணாதிசயம் என்பது -------------------------, ------------------------------ தனித்தனியே வேறுபடுத்தி அறிந்து கொள்வதாகும்.
6. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வழிகளில் பரிசுத்த ஆவியானவர் ஆள்தன்மை கொண்டவர் என்று வேதாகமம் போதிக்கிறது ? **(இரண்டை வட்டமிடவும்)**
   a. அவர் மக்களோடு நடப்பதால், அவர் நபர் என்று காண்பிக்கிறது
   b. பரிசுத்த ஆவியானவருக்கு "அவர்" "அவருடைய" பதங்களை வேதாகமம் பயன்படுத்துகிறது
   c. பரிசுத்த ஆவியானவரின் செயல்கள், அவர் நபர் என்பதைக் காண்பிக்கிறது
   d. பரிசுத்த ஆவியானவர் தேவன், அவர் ஆள்தன்மை கொண்டவர்
7. பரிசுத்த ஆவியானவரின் பணி, குணம், செயல்பாடுகள் இவைகளைக் குறித்து கீழே உள்ள வசனங்கள் போதிப்பது என்ன ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)
   a. ரோமர் 8:27 ------------------------------------------------------------
   b. அப்போஸ்தலர்1:8 ------------------------------------------------------------
   c. யோவான் 14:16 ------------------------------------------------------------

d. ரோமர் 8:26 ----------------------------------------------------------------

e. ரோமர் 8:14 ----------------------------------------------------------------

8. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக செய்யப்படும் பாவங்கள் என்ன என்பதை கீழே உள்ள வேதசனங்கள் கூறுகின்றன ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

a. எபேசியர் 4:30 ----------------------------------------------------------

b. மத்தேயு 12:31,32 ----------------------------------------------------------

c. 1 தெசலோனிக்கேயர் 5:19 ----------------------------------------------------------

d. அப்போஸ்தலர் 5:3 ----------------------------------------------------------

9. எந்த மூன்று வழிகளில் பரிசுத்த ஆவியானவர் நேரடியாக பிதாவோடும், குமாரனோடும் சம்பந்தம் கொண்டுள்ளார் என கீழே உள்ள வேதவசனங்கள் கூறுகின்றன ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

a. 2 கொரிந்தியர் 13:14 ----------------------------------------------------------

b. மத்தேயு 28:19 ----------------------------------------------------------

c. 1 கொரிந்தியர் 12:4–6 ----------------------------------------------------------

10. பரிசுத்த ஆவியானவர் என்ன செய்ய முடியும் என்று கீழே உள்ள வசனங்கள் போதிப்பது என்ன ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

a. யோவான் 3:5 ----------------------------------------------------------

b. ரோமர் 8:11 ----------------------------------------------------------

c. 1 கொரிந்தியர் 12:8–11 ----------------------------------------------------------

d. யோவான் 6:23 ----------------------------------------------------------

e. 2 பேதுரு 1:21 ----------------------------------------------------------

11. **பொருத்துக :–** கீழே உள்ள வசனங்களில் பரிசுத்த ஆவியானவரின் பெயர்களைக் கண்டுபிடிக்கவும்.

| | | |
|---|---|---|
| ------------------ | 1 பேதுரு 4:14 | a. நித்திய ஆவியானவர் |
| ------------------ | எபிரெயர் 10:29 | b. தேவனுடைய ஆவியானவர் |
| ------------------ | ரோமர் 8:2 | c. கிருபையின் ஆவியானவர் |
| ------------------ | எபிரெயர் 9:14 | d. ஜீவ ஆவியானவர் |
| ------------------ | 1 கொரிந்தியர் 3:16 | e. மகிமையுள்ள ஆவியானவர் |

12. **பொருத்துக :–** கீழே உள்ள வசனங்களில் பரிசுத்த ஆவியானவருக்கு கொடுக்கப்பட்டுள்ள அடையாளங்கள் என்ன என்பதை கண்டுபிடிக்கவும்.

| | | |
|---|---|---|
| ------------ | யோவான் 7:37–39 | a. முத்திரை |
| ------------ | எபேசியர் 4:30 | b. அக்கினி |
| ------------ | யோவான் 3:8 | c. அச்சாரம் |
| ------------ | எரேமியா 20:9 | d. தண்ணீர் |
| ------------ | 2 கொரிந்தியர் 5:5 | e. காற்று |

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________